இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

1464/5 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆம்திகதி திங்கட் கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது.)

பகுதி I : தொகுதி (I)- பொது அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 8/96

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் .

பி.ஏ.ஜகத் புஷ்பகுமார,
சமூக சேவைகள் மற்றும்
சமூக நலத்துறை பதில் அமைச்சர்

கொழும்பு
2006,செத்தெம்பர் 21.

ஒழுங்கு விதிகள்

1. இந்த ஒழுங்கு விதிகள் 2006 ஆம் ஆண்டின் ஓய்வூதிய சமூக பாதுகாப்புத் திட்ட ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.
2. இச்சட்டத்தின் நாலாம் பிரிவின் கீழ் சபையால் தாபிக்கப்பட்ட ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நன்மைத் திட்டம் (இவைகள் அனைத்தும் பின்னர் ''திட்டம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்.)பின்வரும் வெவ்வேறு முறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

   (அ) ''சஹன'' முறைமை அட்டவணை ''அ''என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறு

   (ஆ) ''திலின'' முறைமை அட்டவணை ''இ'' என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறு

   (இ) ''இசுறு'' முறைமை அட்டவணை ''ஈ''என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறு

   (ஈ) ''சரண''முறைமை அட்டவணை ''உ'' என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறு

   (உ) ''சுரக்கும'' முறைமை அட்டவணை ''ஊ'' என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறு

   (ஊ) ''தனலச்சுமி'' முறைமை அட்டவணை ''எ'' என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறு

3. இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆளொருவர் ''சஹன'' ''திலின'' ''இசுறு''அல்லது''சரண'' ஆகிய ஏதேனுமொரு திட்டத்திற்கு உதவு தொகை செலுத்துவதனை தெரிவு செய்யலாம் என்பதுடன் ''சுரக்கும'' அல்லது ''தனலச்சுமி'' என்னும் முறைமைக்கு உதவு தொகை செலுத்துநர் ஒருவர் அவரது தெரிவையும் உதவு தொகை செலுத்துவதற்கான அவரது ஆற்றலையும் பொறுத்து அத்தகைய முறைகளுள் ஏதேனும் ஒன்றுக்கு அல்லது இரண்டிற்கும் உதவு தொகை செலுத்துநராகலாம். உதவு தொகை செலுத்துநராக திட்டத்தில் சேர்வதற்கென சமர்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் அவர் தெரிவு செய்த எந்த முறைமைக்கு உதவுதொகை செலுத்த விரும்புகின்றாரோ அந்த முறையைக் குறிப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

4. இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் திட்டத்திற்கு உதவு தொகை செலுத்துநர் ஒருவராவதற்கான தகைமையானது ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவரல்லாதவராகவும் ஓய்வூதியத்திற்குரிய பதவியொன்றை வகிக்காதவராகவும் இருத்தல் வேண்டும்:-

5. நாலாம் ஒழுங்கு விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமைகளுக்கு மேலதிமாக ''சஹன'' அல்லது ''திலின'' என்னும் முறைமைக்கு உதவு தொகை செலுத்துநர் ஒருவராவதற்கு விரும்பும் ஆளொருவர் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

(அ) ''சஹன'' முறைமைக்கு உதவுதொகை செலுத்துநஒராருவராவதற்கு 36,000/= ரூபாவுக்குக் குறையாத ஆண்டு வருமானமொன்றை அல்லது ''திலின'' முறைக்கு உதவு தொகை செலுத்துநரொருவராவதற்கு 72,000/= ரூபாவை மிஞ்சாத ஆண்டு வருமானமொன்றைக் காட்ட இயலுமாதல்;

(ஆ) உதவுதொகை செலுத்துநரை சேமலாப நிதிய நலனொன்றின் கொடுப்பனவுக்கு உரித்துடையவராக்கும் தொழிலொன்றில் தற்பொழுது தொழிலுக்கு அமர்த்தப்படாதிருத்தல்;

(இ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் தொகை குறிப்பிட்ட கிராம அலுவலராலும் பிரதேச செயலாளராலும் அத்தாட்சிப்படுத்தப்படல்.

6. திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளப்பட விரும்பும் ஒவ்வொருவராலும் சபையால் அங்கீகரிக்கப்பட்டவரான அத்தகைய படிவத்திலான விண்ணப்பமொன்றை கீழே குறித்துரைக்கப்பட்ட உதவு தொகையுடன் சேர்த்து அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குச் சமர்பித்தல் வேண்டும்:-

(அ) அட்டவணை (1) என்பதன் நிரை I இல் குறித்துறைக்கப்பட்ட வயதில் ''சஹன'' முறைமைக்கு உதவு தொகை செலுத்துநஒராருவராக விரும்பும் ஆளொருவர் அவ் அட்டவணையின் நிரை II இல் நேரொத்த பதிவில் குறித்துறைக்கப்பட்ட காலாண்டு தவணைக் கொடுப்பனவை அல்லது நிரை IV இல் நேரொத்த பதிவில் குறித்துறைக்கப்பட்ட மொத்தத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) ''இ'' ''ஈ'' அல்லது ''உ'' என்னும் அட்டவணையில் குறித்துறைக்கப்பட்ட வயதில் ''திலின'' ''இசுறு'' அல்லது ''சரண'' முறைமைக்கு உதவு தொகை செலுத்துநர் ஒருவராக விரும்பும் ஆளொருவர் அவ்அட்டவணையின் நிரை II இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளை அல்லது நிரை IV இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மொத்தத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(இ) அட்டவணை ''ஊ'' அல்லது ''எ'' என்பதன் நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட மாதாந்த ஓய்வூதியத்தை அல்லது அதன் மடங்கு தொகைகளைப் பெறுவதற்கு அவ்வட்டவணைகளின் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட வயதில் ''சுரக்கும'' அல்லது ''தனலச்சுமி'' முறைமைக்கு உதவுதொகை செலுத்துநரொருவராக விரும்பும் ஆளொருவர் நிரை III இல் குறித்துரைக்கப்பட்ட மாதாந்த தவணைக் கொடுப்பனவை நிரை IV இல் குறித்துரைக்கப்பட்ட காலாண்டு தவணைக்கொடுப்பனவை அல்லது நிரை V இல் குறித்துரைக்கப்பட்ட ஆண்டு தவணைக் கொடுப்பனவை நிரை VI இல் குறித்துரைக்கப்பட்ட ஆண்டு தவணைக் கொடுப்பனவை அல்லது நிரை VII இல் குறித்துரைக்கப்பட்ட ஆண்டு தவணைக் கொடுப்பனவை நிரை VIII இல் குறித்துரைக்கப்பட்ட ஆண்டு தவணைக் கொடுப்பனவை அல்லது நிரை IX இல் குறித்துரைக்கப்பட்ட ஆண்டு தவணைக் கொடுப்பனவை அல்லது நிரை X இல் குறித்துரைக்கப்பட்ட மொத்த தொகையின் கொடுப்பனவை அல்லது அதன் மடங்கு தொகைகளைச் செலுத்துதல் வேண்டும்

7. ''சஹன'' அல்லது ''திலின'' முறைமைக்கு உதவுதொகை செலுத்துநரொருவராகும் ஆளொருவருக்கு ஒரு தனியாள் அல்லது ஒரு நிறுவனம் உதவி வழங்க முடியும்.

8. திட்டத்தின் உறுப்பினர் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மேல் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் செம்மையை ஆராய்ந்தறிந்து அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற முப்பது நாட்களுள் அவரது விதப்புரையையும் விண்ணப்பகாரரால் செலுத்தப்பட்ட உதவு தொகையையும் சபைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

9. (1) சபை விண்ணப்பகாரர் ஒருவரின் விண்ணப்பத்திற்கு அதன் அங்கீகாரம் அளிக்கப்படுமிடத்து சபை அவரை திட்டத்திற்கு உதவு தொகை செலுத்துநரொருவராகச் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். சபை விண்ணப்பத்தை நிராகரிக்கத் தீர்மானிக்குமிடத்து அதன் தீர்மானத்தை அவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். என்பதுடன் விண்ணப்பக்காரரால் செலுத்தப்பட்ட உதவு தொகை அவருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்

(2) விண்ணப்பக்காரர் ஒருவர் திட்டத்திற்கு உதவு தொகை செலுத்துனர் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுமிடத்து சபை சட்டத்தின் 14ஆம் பிரிவிற்கிணங்க அவரால் செலுத்தப்பட வேண்டிய உதவு தொகைகளையும் காப்புறுத் பத்திரத்தின் நியதி நிபந்தனைகளையும் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் அவர் உரித்துடையவராகும் நலன்களையும் தரும் காப்புறுதிப்பத்திரமொன்றை அவருக்கு வழங்குதல் வேண்டும்.

10. (1) மாதாந்த, காலாண்டு அல்லது ஆண்டு தவணைக்கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கான விரும்புத் தெரிவைத் தேர்ந்தெடுத்த உதவுதொகை செலுத்துநர் ஒவ்வொருவரும் அவருக்கு வழங்கப்பட்டுள்ள காப்புறுதிப் பத்திரத்தில் குறித்துரைகப்பட்ட உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் அத்தகைய தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் வேண்டும். எனினும் மாதாந்த, காலாண்டு அல்லது ஆண்டு தவணைக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு ஒரு மாதகால பரிவுக்காலம் அனுமதிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பரிவு காலத்தின் பின்னர் கொடுப்பனவு செய்யப்படுமிடத்து உதவுதொகை செலுத்துநர் வருமதியான உதவுதொகைக்கு மேலதிகமாக தவணை தவறுகையின் விளைவாக சபை இழந்திருக்கும் உதவுதொகையின் மீது திரண்வட்டியையும் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் எத்தனை எண்ணிக்கைகளிலுமான தவணைக் கொடுப்பனவுகளை முன்கூட்டியே செலுத்தலாம். என்பதுடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் அப்போதைக்கு நிலவும் வட்டி வீதங்களுக்கிணங்க தள்ளுபடியொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

11. தவணைக் கொடுப்பனவுகள் உதவுதொகை செலுத்துநாரால் பிரிவுக்காலத்திற்குள் செலுத்தப்படுமிடத்து அவருக்குச் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத்தொகையில் சீராக்கம் எதுவும் செய்யப்படுத்தலாகாது. ஆயினும் தவணைக் கொடுப்பனவும் 10 ஆம் ஒழுங்குவிதியின் (1)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வட்டியும் பிரிக்காலம் முடிவடைந்த பின்னர் செலுத்தப்படாதவிடத்து வருமதியான அத்தகைய தவணைக் கொடுப்பனவும் வட்டியும் திரண்ட கணக்கு நிலுவையிலிருந்து திரண்ட தேறிய கணக்கு நிலுவமைக்கமைய கழிக்கப்பட்டு 13 ஆம் ஒழுங்கு விதியின் (2) ஆம் பந்தியின் கீழ் செலுத்தப்படற்பாலதான அதிகபட்ச ஓய்வூதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.
12. (1).

(அ) உதவுதொகை செலுத்துநர் ஒருவராக சேர்த்துக்கொள்ளப்படுவதற்கென சமர்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் பொய்யான அல்லது தவறான தகவல் அடங்கியுள்ளதாக அல்லது ஏதேனும் முக்கியமான தகவல் மறைக்கப்பட்டிருப்பதாகக் காணப்படின் அல்லது,

(ஆ) உதவுதொகை செலுத்துநர் திட்டத்தில் சேர்வதற்கு அவரை இயலச் செய்த தகைமையை இழப்பாராயின் சேர்த்துக்கொள்ளப்பட்டதன்மீது உதவுதொகை செலுத்துநருக்கு வழங்கப்பட்ட காப்புறுதிப்பத்திரம் இல்லாதொழிக்கப்படலாம்.

(2) உதவுதொகை செலுத்துநர் ஒருவருக்கு வழங்கப்பட்ட காப்புறுதிப்பத்திரமொன்று (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் கீழ் இல்லாதொழிக்கப்படுமிடத்து,

(அ) உதவுதொகை செலுத்துநரால் தேறிய உதவுதொகை எதுவும் செலுத்தப்பட்டிருப்பின் அத்தகைய உதவுதொகை அப்போதைக்கு சபையால் ஈட்டப்பட்ட வட்டிவீதப்படி கணிப்பிடப்பட்ட வட்டியொன்றுடன் சேர்த்து இரண்டு புள்ளிகளால் கழிக்கப்பட்டு மீளளிப்பு செய்யப்படுதல் வேண்டும். அல்லது

(ஆ) உதவுதொகை செலுத்துநர் புதிய உதவுதொகை செலுத்துநர் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளப்படலாம் என்பதுடன் அவர் அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படுமிடத்து முன்னர் அவரால் செலுத்தப்பட்ட தேறிய உதவுதொகைகள் புதிய உதவுதொகை செலுத்துர் ஒருவராக அவரால் செலுத்தப்படற்பாலதான தவணைக் கொடுப்பனவுகளுக்கெதிராக எதிரீடு செய்யப்படலாம்.

(3) சபை (1) ஆம் உட்பந்தியின்கீழ் உதவுதொகை செலுத்துநர் ஒருவரின் காப்புறுதிப்பத்திரத்தை இல்லாதொழிக்குமிடத்து, இல்லாதொழிக்கப்படும் நேரத்தில் உதவுதொகை செலுத்துநர் தவணைக்கொடுப்பனவுகளின் இருபத்தைந்து வீதத்திற்குமேல் செலுத்தியிருப்பின் தேறிய உதவுதொகையின் தொகை அவருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

13. (1) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் 6ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எல்லா மாதாந்த காலாண்டு அல்லது ஆண்டு தவணைக் கொடுப்பனவுகளையும் அல்லது மொத்த தொகைக்கொடுப்பனவையும் முழுமையாகச் செலுத்தியிருப்பின் அத்தகைய உதவுதொகை செலுத்துநர் எந்த விருப்புத்தெரிவின்மீது திட்டத்திற்கு சேர்ந்தாரோ அந்த விருப்பத்தெரிவின் அடிப்பையிடையில்:-

(அ) விடயத்திற்கேற்ப அட்டவணை ''அ'' ''இ'' ''ஈ'' அல்லது ''உ'' என்பதன் நிரை VI இல் குறித்துரைக்கப்பட்ட மாதாந்த ஓய்வூதியத்தை அல்லது

(ஆ) விடயத்திற்கேற்ப அட்டவணை ''ஊ''அல்லது ''எ'' என்பதன் நிரை II இல் தரப்பட்டுள்ள மாதாந்த ஓய்வூதியத்தை அல்லது அதன் மடங்கு தொகையொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் செலுத்தப்படற்பாலதான மொத்த தவணைக் கொடுப்பனவுகளுக்கும் குறைவான ஆனால் சபையால் அவருக்கு வழங்கப்பட்ட காப்புறுதிப்பததிரத்தின் தேவை ஏற்பாடுகளுக்கிணங்க வருமதியான தவணைக் கொடுப்பனவுகளின் எழுபத்தைந்து வீதத்ததுக்குமேல் செலுத்தியிருக்குமிடத்து உதவுதொகை செலுத்துநர் எந்தத் திகதியன்று ஓய்வூதியத்தைப் பெறுவதற்குத் தகுதியுடையவராகின்றாரோ அந்தத் திகதியிலிருந்து சபைக்கு அவர் செலுத்தியிருக்கும் உதவுதொகையின் விகிதாசாரப்படி மாதாந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்குத் உரித்துடையவராதல் வேண்டும்.

(3) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் சபையால் அவருக்கு வழங்கப்பட்ட காப்புறுதிப்பத்திரத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க வருமதியான தொகையின் இருபத்தைந்து வீதத்துக்கு மேல் ஆனால் எழுபத்தைந்து வீதத்துக்கு குறைவாகச் செலுத்தியிருக்குமிடத்து உதவுதொகை செலுத்துநர் அவரது வேண்டுகோளின்பேரில் அவரால் சபைக்கு செலுத்தப்பட்ட தேறிய உதவுத்தொகைகளை அப்போதைக்கு சபையால் ஈட்டப்பட்ட சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு வட்டியின் மீது கணிக்கப்பட்ட வட்டியொன்றுடன் சேர்த்து இரண்டு புள்ளிகளால் குறைக்கப்பட்டுப் பெறுதற்கு உரித்துடையவராதல் வேண்டும்

(4) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் சபையால் அவருக்கு வழங்கப்பட்ட காப்புறுதிப்பத்திரத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க செலுத்தப்படற்பாலதான தவணைக்கொடுப்பனவுகளின் மொத்த எண்ணிக்கையின் இருபத்தைந்து வீதத்திற்கு குறைவாகச் செலுத்தியிருக்குமிடத்து அத்துடன் அவர் மேலதிகக் கொடுப்பனவுகள் எவற்றையும் செலுத்த இயலாதவராக இருக்குமிடத்து அவரால் அந்நேரம்வரை செலுத்தப்பட்ட உதவுதொகைகள் சபைக்கு இழப்பிக்கப்டுதல் வேண்டும்.

14. (1) திட்டத்தின் ஏதேனும் முறைமைக்கு உதவுதொகை செலுத்துநர்கள் மேலதிக உதவுதொகைகள் எவற்றையும் செலுத்த வேண்டியில்லாமல் இயலாமை நன்மைக்கு மரணப்பணிக்கொடையொன்றுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ''இசுறு'' ''சரண'' ''சுரக்கும'' அல்லது ''தனலச்சுமி'' என்னும் முறைமைக்கும் உதவுதொகை செலுத்தநராகும் ஆளொருவர் வருமதியான தவணைக்கொடுப்பனவைத் தொடர்ச்சியாக செலுத்தியுள்ளவிடத்து உதவுதொகை செலுத்துநரொருவரான பின்பு குறித்துரைக்கப்பட்டவொருகாலப்பகுதி கழிந்த பின்னர் காலத்திற்குகாலம் மேற்கொள்ளப்பட்ட கணிப்பியல் மதிப்பீட்டைக் கருத்திற்கொண்டு ஏதேனும் மேலதிக நன்மைகளுடன் சேர்த்து திரண்ட கணக்கு நிலுவையைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்

15. பின்வரும் இரண்டு பிரிவுகளைச் சேர்ந்த இயலாமை நன்மைகள் இருத்தல் லேண்டும்.:-

01. நிரந்தரமான, பகுதியளவிலான இயலாமையின் நன்மைகள், அத்துடன்

02. நிரந்தரமான முழு இயலாமையின் மீதான நன்மைகள்

16. உதவுதொகை செலுத்துநர் எவரும் விபத்தொன்றில் அல்லது சுகயீனத்தின் விளைவாக:-

01. இரண்டு கைகளையும் இழக்குமிடத்து அல்லது இரண்டு கைகளினதும் நிரந்தரமான இயலாமைக்கு ஆளாகுமிடத்து,

02. இரண்டு பாதங்களையும் இழக்குமிடத்து அல்லது இரண்டு பாதங்களினதும் நிரந்தரமான இயலாமைக்கு ஆளாகுமிடத்து,

03. இரண்டு கண்களிலும் பார்வையை இழக்குமிடத்து,

04. ஒரு கையை இழக்குமிடத்து அல்லது கையின் நிரந்தர இயலாமைக்கு ஆளாகுமிடத்து அத்துடன் ஒரு பாதத்தை இழக்குமிடத்து அல்லது ஒரு பாதத்தின் நிரந்தரமான இயலாமைக்கு ஆளாகுமிடத்து,

05. ஒரு கையை அல்லது பாதத்தை இழக்குமிடத்து அத்துடன் ஒரு கண்ணில் பார்வையை இழக்குமிடத்து அல்லது ஒரு பாதத்தை அல்லது ஒரு கையின் நிரந்தரமான இயலாமைக்கு ஆளாகுமிடத்து அத்துடன் ஒரு கண்ணில் பார்வையை இழக்குமிடத்து,

06. கழுத்திற்கு கீழே முற்றாகச் செயலற்றுப்போகுமிடத்து, அத்தகைய உதவுத்தொகை செலுத்துநர் இந்த ஒழுங்கு விதியின் நோக்கத்திற்கு முழுமையான நிரந்தரமான முழு இயலாமைக்கு ஆளானவராகக் கருதப்படுதல் வேண்டும்.

17. உதவுதொகை செலுத்துநர் ஒருவர் விபத்தொன்றில் அல்லது சுகயீனத்தின் விளைவாக,

(அ) ஒரு கண்ணில் பார்வையை இழக்குமிடத்து,

(ஆ) ஒரு கையை இழக்குமிடத்து அல்லது கையின் நிரந்தரமான இயலாமைக்கு ஆளாகுமிடத்து,

(இ) ஒரு பாதத்தை இழக்குமிடத்து அல்லது ஒரு பாதத்தின் நிரந்தரமான இயலாமைக்கு ஆளாகுமிடத்து,

அவர் இந்த ஒழுங்கு விதியின் நோக்கத்திற்கு நிரந்தரமான பகுதியளவிலான இயலாமைக்கு ஆளானவராக கருதப்படுதல் வேண்டும்

18. இந்த ஒழுங்கு விதிகளுக்கான அட்டவணை "ஆ" என்பதன் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட இரண்டு வயதுப்பிரிவுகளுள் ஏதேனுமொரு வயதுப்பிரிவிற்கு உட்படும் உதவுதொகை செலுத்துநர் ஒருவர் அதன் நிரை IIஇல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் :-

(அ). நிரந்தரமான முழு இயலாமைக்கு ஆளாகுமிடத்து அவர் மொத்ததொகையைப் பணிக்கொடையாக நிரை II இலுள்ள பதிவுக்கு நேரொத்தவாறு நிரை III இல் உள்ள அத்தகைய தொகையைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் அல்லது உதவுதொகை செலுத்துநரின் விருப்புத்தெரிவின் மீது அட்டவணை "அ", "இ", "ஈ", அல்லது "உ" VI இல் குறித்துரைக்கப்பட்ட மாதாந்த ஓய்வூதியத்தை அல்லது அட்டவணை "ஊ" அல்லது "எ" என்பதன் நிரை II இல் தரப்பட்டுள்ள மாதாந்த ஓய்வூதியத்தை அல்லது அதன் மடங்கு தொகையைப்பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். மாதாந்த ஓய்வூதியமாகச் செலுத்தப்பட்ட தொகை 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பருவகாலப்படியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ). நிரந்தரமான பகுதியளவிலான இயலாமைக்கு ஆளாகுமிடத்து அவர் மொத்த தொகைப் பணிக்கொடையாக நிரை II இலுள்ள பதிவுக்கு நேரொத்தவாறு நிரை IV இல் தரப்பட்டுள்ள தொகையைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் அல்லது,

(இ). மரணமடையுமிடத்து அவரது சட்டபூர்வமான மரபுரிமையாளர் மொத்த தொகையைப் பணிக்கொடையாக நிரை II இலுள்ள பதிவுக்கு நேரொத்தவாறு நிரை V இல் தரப்பட்டடுள்ள தொகையைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(ஈ). ''திலின'', ''இசுறு'', ''சரண'', அல்லது ''தனலச்சுமி'' என்னும் முறைமைக்குள் ஏதேனுமொன்றுக்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவர் நிரந்தரமான முழு இயலாமைக்கு அல்லது நிரந்தரமான பகுதியளவிலான இயலாமைக்கு ஆளாகுமிடத்து அல்லது மரணமடையுமிடத்து பணிக்கொடையில் கொடுப்பனவில் உதவுதொகை செலுத்துநர் அல்லது உதவுதொகை செலுத்துநரின் சட்டபூர்வமான மரபுரிமையாளர் அட்டவணை ''ஆ'' என்பதன் நிரை II இன் பதிவுக்கு நேரொத்தவாறு நிரைகள் III,IV அத்துடன் Vயினதான பணிக்கொடையையும் அத்துடன் உதவுதொகை செலுத்துநரால் செலுத்தப்பட்ட தேறிய உதவுதொகைகளையும் அவற்றின் மீதான வட்டியையும், பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆயினும், அவர் ஓய்வூதியத்தைப் பெறுபவராகவிருப்பின், நிரந்தரமான பகுதியளவிலான இயலாமை விடயத்தில் உதவுதொகை செலுத்துநருக்கு தேறிய உதவுதொகை செலுத்தப்படுதலாகாது.

19. 16 ஆம் 17 ஆம் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சம்பவம் நிகழுமிடத்து மொத்த தொகைப் பணிக்கொடையானது விடயத்துகேற்ப உதவுதொகை செலுத்துநருக்கு அல்லது அவரது சட்டபூர்வமான மரபுரிமையாளருக்கு ஒரு தடவை மாத்திரமே செலுத்தப்படுதல் வேண்டும். ஆயினும், உதவுதொகை செலுத்துநர் பகுதியளவிலான இயலாமைக்கு பணிக்கொடையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு திட்டத்தின் கீழ் தொடர்ந்திருக்குமிடத்து அதன் பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராவதற்கு முன்னர் முழு இயலாமைக்கு ஆளாவராயின் உதவுதொகை செலுத்துநருக்கு முழு இயலாமை ஏற்பட்ட திகதி வரை செலுத்தற்படற்பாலதான முழு இயலாமைக்கான பணிக்கொடைக்கும் பகுதியிலான இயலாமைக்கு செலுத்தப்படும் பணிக்கொடைக்கும் இடையிலான வித்தியாசம் செலுத்தப்படுதல் வேண்டும்.

20. உதவுதொகை செலுத்துநர் ஒருவர் அல்லது அவரது சட்டபூவமான மரபுரிமையாளர் விடயத்திற்கேற்ப இயலாமைக்கு அல்லது மரணத்திற்கு மொத்த தொகையினதான பணிக்கொடையைப் பெறுவதற்கு உரித்துடையவராகுமிடத்து அத்தகைய பணிக்கொடையை பெறுவதற்கு எந்தச் சம்பவம் அவரை உரித்துடையவராக்குகின்றதோ அந்தச் சம்பவம் பற்றி இடம்பெற்ற இருபது நாட்களுள் விடயத்திற்கேற்ப அத்தகைய உதவுதொகை செலுத்துநர் அல்லது அவரது சட்டபூர்வமான மரபுரிமையாளர் சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

21. (1) காப்புறுதிப்பத்திரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் இடம்பெறும் இயலாமை அல்லது மரண விபத்தொன்றின் விளைவாக ஏற்படுமிடத்து மாத்திரமே உதவுதொகை செலுத்துநர் ஒருவர் அல்லது அவரது சட்டபூர்வமான மரபுரிமையாளர் விடயத்திற்கேற்ப இயலாமைக்கு அல்லது மரணத்திற்கு மொத்த தொகையிலான பணிக்கொடையொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் காப்புறுதிப்பத்திரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 12 மாதங்களுக்கு இயற்கை காரணங்களினால் மரணமடையுமிடத்து அவரால் செலுத்தப்படற்பாலதான தவணைக் கொடுப்பனவுகளின் எண்ணிக்கையின் ஐம்பது வீதத்திற்கு மேல் அந்நேரமளவில் செலுத்தப்பட்டிருப்பின் உதவுதொகை செலுத்துநரின் சட்டபூர்வமான மரபுரிமையாளர் ஐயாயிரம் ரூபாவை மிஞ்சாத தொகையினதாக தண்ணளிக் கொடுப்பனவொன்றையும் அத்துடன் உதவுதொகை செலுத்துனரால் செலுத்தப்பட்ட தேறிய உதவுதொகைகளையும் பெறவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

22. திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவர் இயலாமையானது தற்கொலை எத்தனிப்பொன்றின் அல்லது தானாகவே ஏற்படுத்திக்கொண்ட ஊறுகளின் விளைவாக இயலாமை ஏற்படுத்துமிடத்து அவர் இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் செலுத்தப்படற்பாலதான மொத்த தொகையினதான பணிக்கொடைக்கு உரித்தடையவராதலாகாது.

23. இவ்வொழுங்குவிதிகளின் கீழ்:-

(அ) பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது பிரகடனப்படுத்தப்படாத போர், குடியியல் போர், கலவரம், புரட்சி, அரசுக்கெதிரான கிளர்ச்சி, முற்றுகையிடல் அந்நிய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பவற்றின் விளைவாக, அல்லது

(ஆ) உதவுதொகை செலுத்துநர் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விமானமொன்றில் அல்லது ஏதேனும் கப்பலில் வேறு வகையிலான வான் போக்குவாத்தில் கட்டணம் செலுத்தாத கடவுப்பயணம் செய்ததன் விளைவாக,

(இ) குடிபோதையில் அல்லது போதைப்பொருட்பாவணையின் கீழ் இருக்கும்போது உதவுதொகை செலுத்துநரின் ஏதேனும் செயலின் விளைவாக அல்லது,

(ஈ) சட்டவிரோதமான செயலொன்றுக்கெதிராக சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரி எவராலும் தடுப்பு வழிமுறைகளை எடுப்பதன் விளைவாக,

அத்தகைய உதவுதொகை செலுத்துநருக்கு ஏற்படுத்தப்பட்ட இயலாமைக்கு அல்லது இறப்பிற்காக உதவுதொகை செலுத்துநர் ஒருவருக்கு அல்லது அவரது சட்டபூர்வமான மரபுரிமையாளருக்கு மொத்த தொகையினதான பணிக்கொடை எதுவும் செலுத்தப்படுதலாகாது.

24. (1) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவர் ஓய்வூதியமொன்றை பெற்றுக்கொண்டதன் பின்னர் ஆனால் 80 வயதை அடைவதற்கு முன்னர் அவரது வாழ்க்கைத் துணைக்கு அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆளுக்கு முன்னராகவே இறக்கின்றவிடத்து அத்தகைய உதவுதொகை செலுத்துநரின் வாழ்க்கைத் துணை அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள் ஏதேனும் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக அல்லாதவராயின் ஓய்வூதியம் எதனையும் பெறாதவராக இருப்பாராயின் அல்லது ஏதேனும் ஓய்வூதியத்தை பெறுவதற்கு உர்தித்டையவராக அல்லாதவராயின் அத்தகைய வாழ்க்கைத்துணை அல்லது உதவுதொகை செலுத்துநரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள், உதவுதொகை செலுத்துநர் உயிரோடிருப்பின் அவர் 80 வயதை அடையும் திகதி அல்லது உதவுதொகை செலுத்துநரின் வாழ்க்கைத் துணை அல்லது உதவுதொகை செலுத்துநரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள் இறக்கும் திகதி என்பவற்றுள் எது முன்னராக நிகழ்கின்றதோ, அத்திகதி வரை உதவுதொகை செலுத்துநருக்கு செலுத்தப்பட்டிருக்கும் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) வாழ்க்கைத் துணை அல்லது (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள் ஏதேனும் ஓய்வூதியத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருப்பின் அல்லது ஏதேனும் ஓய்வூதியம் பெறுபவராக அல்லது ஏதேனும் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராக இருப்பின் அவர் உதவுதொகை செலுத்துநரால் செலுத்தப்பட்ட தேறிய உதவுத்தொகைகளின் மீதியை ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு உரித்துடைய திகதியன்றுள்ளவாறு சபையால் நிதியத்திற்கு ஈட்டப்பட்ட வட்டிவீதமாகிய வட்டிவீதமொன்றில் கணிப்பிடப்பட்ட வட்டியொன்றுடன் சேர்த்து இரண்டு புள்ளிகளால் குறைக்கப்பட்டுப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவர் ஓய்வூதியமொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் ஆனால் 80 வயதைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பின்னுருத்தாளர் ஒருவரைப் பெயர் குறித்து நியமனம் செய்யாமல் இறக்குமிடத்து அவரது சட்டபூர்வமான மரபுரிமையாளருக்கு தேறிய உதவுதொகையின் மீதியை ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு உரித்துடைய திகதியன்றுள்ளவாறு சபையால் நிதியத்திற்கு ஈட்டப்பட்ட வட்டிவீதமாகிய வட்டிவீதமொன்றில் கணிப்பிடப்பட்ட வட்டியொன்றுடன் சேர்த்து இரண்டு புள்ளிகளால் குறைக்கப்பட்டுப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவர் நிரந்தரமானதும் முழுமையானதுமான இயலாமைக்கான படியைப் பெறுகையில் 80 வயதைப்பூர்த்தி செய்வதற்கு முன்னர் இறக்குமிடத்து அவரது சட்டபூர்வமான மரபுரிமையாளர் உதவுதொகை செலுத்துநரின் திரட்டிய தேறிய உதவுதொகையின் மீதியையும் முழு இயலாமைப் பணிக்கொடையையும் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

25. இவ்வொழுங்குவிதிகளில்:-

''சட்டம்'' என்பது 1996 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, சமூகப் பாதகாப்புச் சபைச் சட்டம் என்று பொருள்படும்.

''அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்'' என்பது திட்டத்தின் நோக்கங்களுக்காக ஒவ்வொரு இடப்பரப்பிற்கும் சபையால் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் என்று பொருள்படும்.

''திரட்டிய தேறிய உதவுதொகையினதும் முழு இயலாமைப் பணிக்கொடையின் மீதி'' என்பது இயலாமைப் படியின் கொடுப்பனவுக்கென பயன்படுத்தப்பட்ட தொகையிலிருந்து செய்யப்பட்ட கழிப்பனவுகளின் பின்னர் எஞ்சியிருக்கும் மீதி என்ற பொருள்படும்.

''தேறிய உதவுதொகையின் மீதி ''என்பது தேறிய உதவுதொகையிலிருந்து ஓய்வூதிய கொடுப்பனவுக்கெனப் பயன்படுத்தப்பட்ட தொகையைக் கழித்த பின்னர் எஞ்சியிருக்கும் மீதி எனறு பொருள்படும். அத்துடன்

''சபை'' என்பது சட்டத்தின் 2 ஆம் பிரிவில் தாபிக்கப்பட்ட இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டம் என்று பொருள்படும்.

''திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர்'' அல்லது உதவுதொகை செலுத்துநர் என்பது எந்த முறையில் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நன்மைத்திட்டம் அடங்கியுள்ளதோ அந்த ஏதேனும் முறைமைக்கு உதவுதொகை செலுத்தும் ஆளொருவர் எனறு பொருள்படும்.

''நிதியம்'' என்பது, சட்டத்தின் 21ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிதியம் என்று பொருள்படும்.

''தேறிய உதவுதொகை'' என்பது, உதவுதொகை செலுத்துநரால் செலுத்தப்பட்டதும் ஓய்வூதியம் செலுத்தும் நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதுமான உதவுதொகைகளை உள்ளடக்கிய பணத்தொகை என்று பொருள்படும்.

''சட்டம் ஏற்புடையதான ஆள்'' என்பது சுயதொழிலிலுள்ள அல்லது 1996 நவெம்பர் 06 ஆம் திகதிய 948/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சுயதொழிலில் அல்லது ஏதேனும் தான் புரியும் தொழிலின் அடிப்படையொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொருவர் என்று பொருள்படும்.

26. 1997 ஜனவரி 03 ஆந் திகதிய 956/13 ஆம் இல்க்கமும் மார்ச் 11 ஆந் திகதிய 1070/11 ஆம் இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் திருத்தப்பட்டவாறான 1996 நவெம்பர் 22அம் திகதிய 950/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க,(சுயதொழில் புரிவோருக்கான) ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நன்மைத்திட்ட ஒழுங்குவிதியை இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

அட்டவணை "அ" "சஹன"

I ஆம் நிரல்	II ஆம் நிரல்	III ஆம் நிரல்	IV ஆம் நிரல்	V ஆம் நிரல்	VI ஆம் நிரல்
திட்டத்தில் சேரும்போது அடுத்துவரும் பிறந்த திகதிக்கு வயது	ஓய்வூதியத்திற்கு உரித்தாகும்வரை செலுத்த வேண்டிய காலாண்டு தவணைக கட்டணம்	ஓய்வூதியத்திற்கு உரித்ததகும்வரை செலுத்த வேண்டிய மாதாந்த கட்டணங்களின் எண்ணிக்கை	திட்டத்திற்சேரும் போது ஒரே தடவையில்செலுத்துவ தாக இருப்பின் செலுத்தவேண்டிய மொத்த உதவுதொகை	திட்டத்தில் சேரும் திகதியிலிருந்து மொத்த தொகை 12 மாதங்களுக்குள் 4தவணைக் கொடுபனவுகளில் செலுத்துவதாயிருப்பன் செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு(ரூபா)	உரித்தாகும் மாதாந்த ஓய்வூதியம் (ரூபா)
18	50	168	1920	497	2500
19	51	164	1940	502	2300
20	52	160	1965	509	2100
21	53	156	1985	514	1900
22	54	152	2005	519	1750
23	55	148	2020	523	1600
24	56	144	2040	528	1450
25	57	140	2055	532	1325
26	58	136	2070	536	1200
27	59	132	2080	539	1100
28	60	128	2095	543	1000
29	63	124	2175	563	950
30	66	120	2255	584	900
31	69	116	2330	603	850
32	73	112	2440	632	800
33	77	108	2515	651	750
34	81	104	2605	675	725
35	85	100	2695	698	700
36	88	96	2760	715	690
37	91	92	2820	730	680
38	96	88	2925	758	670
39	100	84	2975	771	660
40	104	80	3020	782	650
41	109	76	3095	802	640
42	114	72	3165	820	630
43	122	68	3305	856	620
44	128	64	3385	877	610
45	135	60	3445	892	600
46	144	56	3560	922	590
47	152	52	3615	936	580
48	163	48	3705	960	570
49	174	44	3755	973	560
50	180	40	3670	951	550
51	185	36	3545	918	540
52	192	32	3400	881	530
53	205	28	3315	859	520
54	220	24	3185	825	510
55-59	235	20	2955	765	500

அட்டவணை "ஆ"

வலுவிழப்பின் மீது மற்றும் மரணத்தின் மீது பணிக்கொடைக் கொடுப்பனவு

I ஆம் நிரல் திட்டத்தில் சேரும்போது அடுத்துவரும் பிறந்ததிகதியன்று வயது (ஆண்டு)	II ஆம் நிரல் வலுவிழப்பு அல்லது மரணம் ஏற்படும்போது வயது	III ஆம் நிரல் முழுமையான நிரந்தர வலுவிழப்பிற்கு ஆளாகும்போது மொத்த பணிக்கொடைக் கொடுப்பனவு	IV ஆம் நிரல் பகுதியளவிலான நிரந்தர வலுவிழப்பிற்கு ஆளாகும்போது மொத்த பணிக்கொடைக் கொடுப்பனவு	V ஆம் நிரல் மரணம் எற்பட்டவிடத்து பணிக்கொடைக் கொடுப்பனவு
18 முதல் 54வரை	வலுவிழப்பு அல்லது மரணம் ஏற்படும்போது அடுத்து வரும் பிறந்த தினத்தன்று வயது(ஆண்டு)	(ரூபா)	(ரூபா)	(ரூபா)
	18முதல் 33வரை	50,000.00	25,000.00	25,000.00
	34முதல் 43வரை	40,000.00	20,000.00	20,000.00
	44முதல் 51வரை	30,000.00	15,000.00	15,000.00
	52முதல் 55வரை	20,000.00	10,000.00	10,000.00
	57முதல் 60வரை	16,000.00	8,000.00	8,000.00
55 முதல் 59 வரை	உறுப்பாண்மை பெற்ற திகதியிலிருந்து செலுத்தும் காலப்பகுதி இறுதிவரையுள்ள காலத்திற்கும்	12,000.00	6,000.00	6,000.00

அட்டவணை “இ” “திலின”

I ஆம் நிரல்	II ஆம் நிரல்	II I ஆம் நிரல்	IV ஆம் நிரல்	V ஆம் நிரல்	VI ஆம் நிரல்
திட்டத்தில் சேரும்போது அடுத்துவரும் பிறந்ததிகதிக்கு வயது	ஓய்வூதியத்திற்கு உரித்தாகும்வரை செலுத்த வேண்டிய மாதாந்த தவணைக் கட்டணம்	ஓய்வூதியத்திற்கு உரித்தாகும்வரை செலுத்த வேண்டிய மாதாந்த கட்டணங்களின் எண்ணிக்கை	திட்டத்திற்கு சேரும் போது ஒரே தடவையில்செலுத்துவ தாக இருப்பின் செலுத்தவேண்டிய மொத்த உதவுதொகை	திட்டத்தில் சேரும் திகதியிலிருந்து மொத்த தொகை 12 மாதங்களுகுள் 4 தவணைக் கொடுபனவுகளில் செலுத்தியிருப்பின் செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பணவு(ரூபா)	உரித்தாகும் மாதாந்த ஓய்வூதியம் (ரூபா)
18	100	504	11817	3061	5000
19	102	492	12034	3117	4906
20	104	480	12248	3172	4812
21	106	468	12458	3227	4718
22	108	456	12665	3280	4624
23	110	444	12869	3333	4530
24	112	432	13067	3385	4436
25	114	420	13261	3435	4342
26	116	408	13449	3483	4248
27	118	396	13631	3530	4154
28	120	384	13805	3576	4060
29	126	372	14430	3737	3966
30	132	360	15042	3896	3872
31	138	348	15638	4050	3778
32	146	336	16442	4259	3684
33	154	324	17224	4461	3590
34	162	312	17980	4657	3496
35	170	300	18708	4846	3402
36	176	288	19185	4969	3308
37	182	276	19629	5084	3214
38	192	264	20464	5300	3120
39	200	252	21035	5448	3026
40	208	240	21554	5583	2932
41	218	228	22216	5754	2838
42	228	216	22804	5906	2744
43	244	204	23893	6189	2650
44	256	192	24476	6340	2556
45	270	180	25126	6508	2462
46	288	168	25988	6731	2368
47	304	156	26484	6860	2274
48	326	144	27279	7065	2180
49	328	132	26198	6786	2086
50	360	120	27242	7056	1992
51	370	108	26781	6807	1898
52	384	96	25306	6554	1804
53	410	84	24697	6397	1710
54	440	72	23751	6152	1616
55	470	60	22121	5729	1522
56-59	470	60	22121	5729	1500

அட்டவணை “ஈ” “இசுறு”

I ஆம் நிரல்	II ஆம் நிரல்	II I ஆம் நிரல்	IV ஆம் நிரல்	V ஆம் நிரல்	VI ஆம் நிரல்
திட்டத்தில் சேரும்போது அடுத்துவரும் பிறந்ததிகதிக்கு வயது	ஓய்வூதியத்திற்கு உரித்தாகும்வரை செலுத்த வேண்டிய காலாண்டு தவணைக கட்டணம்	ஓய்வூதியத்திற்கு உரித்ததகும்வரை செலுத்த வேண்டிய மாதாந்த கட்டணங்களின் எண்ணிக்கை	திட்டத்திற்சேரும் போது ஒரே தடவையில்செலுத்துவ தாக இருப்பின் செலுத்தவேண்டிய மொத்த உதவுதொகை	திட்டத்தில் சேரும் திகதியிலிருந்து மொத்த தொகை 12 மாதங்களுகுள் செலுத்துவதாயின் தவணைக் கொடுப்பணவு(ரூபா)	உரித்தாகும் மாதாந்த ஓய்வூதியம் (ரூபா)
18	155	504	22,402	1,936	8,000
19	165	492	23,997	2,074	7,878
20	176	480	25,532	2,206	7,756
21	188	468	27,162	2,347	7,634
22	201	456	28,892	2,497	7,512
23	215	444	30,727	2,655	7,390
24	229	432	32,673	2,823	7,268
25	245	420	34,737	3,002	7,146
26	262	408	36,925	3,191	7,024
27	280	396	39,243	3,391	6,902
28	300	384	41,699	3,603	6,780
29	320	372	44,300	3,828	6,658
30	343	360	47,052	4,066	6,536
31	367	348	49,965	4,318	6,414
32	392	336	52,793	4,562	6,292
33	420	324	56,037	4,842	6,170
34	450	312	59,465	5,139	6,048
35	484	300	63,086	5,451	5,926
36	520	288	66,908	5,782	5,804
37	559	276	70,941	6,130	5,682
38	602	264	75,195	6,498	5,560
39	649	252	79,677	6,885	5,438
40	701	240	84,398	7,293	5,316
41	759	228	89,367	7,722	5,194
42	819	216	94,189	8,139	5,072
43	889	204	99,667	8,612	4,950
44	969	192	105,420	9,110	4,828
45	1,058	180	111,457	9,631	4,706
46	1,160	168	117,788	10,178	4,584
47	1,277	156	124,417	10,751	4,462
48	1,412	144	131,353	11,351	4,340
49	1,572	132	138,599	11,977	4,218
50	1,756	120	145,680	12,589	4,096
51	1,966	108	153,560	13,269	3,974
52	2,272	96	161,757	13,978	3,852
53	2,636	84	170,268	14,713	3,730
54	3,120	72	179,126	15,479	3,608
55	3,792	60	188,273	16,269	3,486
56	3,647	60	181,066	15,646	3,364
57	3,502	60	173,853	15,023	3,242
58	3,334	60	165,523	14,303	3,120
59	3,403	60	168,936	14,598	3,000

அட்டவணை “உ” “சரண”

I ஆம் நிரல்	II ஆம் நிரல்	II I ஆம் நிரல்	IV ஆம் நிரல்	V ஆம் நிரல்	VI ஆம் நிரல்
திட்டத்தில் சேரும்போது அடுத்துவரும் பிறந்ததிகதிக்கு வயது	ஓய்வூதியத்திற்கு உரித்தாகும்வரை செலுத்த வேண்டிய காலாண்டு தவணைக கட்டணம்	ஓய்வூதியத்திற்கு உரித்தாகும்வரை செலுத்த வேண்டிய காலாண்டு தவணைக கட்டணங்களின் எண்ணிக்கை	திட்டத்திற்சேரும் போது ஒரே தடவையில்செலுத்தவ தாக இருப்பின் செலுத்தவேண்டிய மொத்த உதவுதொகை	திட்டத்தில் சேரும் திகதியிலிருந்து மொத்த தொகை 12 மாதங்களுகுள் செலுத்துவதாயின் தவணைக் கொடுப்பணவு(ரூபா)	உரித்தாகும் மாதாந்த ஓய்வூதியம் (ரூபா)
18	125	504	14,726	1350	6000
19	140	492	16,463	1509	5850
20	155	480	18,189	1667	5700
21	170	468	19,904	1825	5550
22	185	456	21,606	1981	5400
23	200	444	23,294	2135	5250
24	215	432	24,965	2288	5100
25	230	420	26,618	2440	4950
26	245	408	28,249	2590	4800
27	260	396	29,857	2737	4650
28	275	384	31,437	2882	4500
29	290	372	32,987	3024	4350
30	305	360	34,503	3163	4200
31	320	348	35,979	3298	4050
32	335	336	37,412	3429	3900
33	350	324	38,796	3556	3750
34	365	312	40,125	3678	3600
35	380	300	41,391	3794	3450
36	395	288	42,588	3904	3300
37	410	276	43,705	4006	3150
38	425	264	44,735	4101	3000
39	440	252	45,665	4186	2850
40	455	240	46,484	4261	2700
41	480	228	48,182	4417	2550
42	505	216	49,701	4556	2400
43	530	204	51,017	4677	2250
44	555	192	52,106	4776	2100
45	580	180	52,938	4853	1950
46	620	168	54,808	5024	1800
47	660	156	56,259	5157	1750
48	700	144	57,235	5247	1700
49	740	132	57,676	5287	1650
50	800	120	58,988	5407	1600
51	850	108	58,742	5385	1600
52	900	96	57,617	5282	1600
53	950	84	55,500	5087	1600
54	1000	72	52,263	4791	1600
55-59	1050	60	61,364	5167	1600

அட்டவணை “ஊ” “சுரெக்கும”

வயது	மாதாந்த ஓய்வூதியம்	மாதாந்த தவணைக் கொடுப்பனவு	காலாண்டு தவணைக் கொடுப்பனவு	25 ஆண்டுகளில் 25 தவணைக் கொடுப்பனவுகள	20 ஆண்டுகளில் 20 தவணைக் கொடுப்பனவுகள்	15 ஆண்டுகளில் 15 தவணைக் கொடுப்பனவுகள்	**10** ஆண்டுகளில் 10 தவணைக் கொடுப்பனவுகள்	05 ஆண்டுகளில் 05 தவணைக் கொடுப்பனவுகள்	ஒரே தடவைக் கொடுப்பனவு
18	1000	40	100	400	425	475	575	925	3800
19	1000	40	110	425	450	500	625	1000	4100
20	1000	40	120	475	500	550	675	1100	4500
21	1000	50	130	525	550	600	750	1200	4900
22	1000	50	140	575	600	650	800	1300	5300
23	1000	50	150	625	650	725	875	1425	5800
24	1000	60	170	675	700	775	975	1550	6300
25	1000	60	180	725	775	850	1050	1700	6900
26	1000	70	200	800	850	925	1150	1850	7500
27	1000	80	220	875	925	1025	1250	2025	8200
28	1000	80	240	950	1000	1100	1375	2200	8900
29	1000	90	260	1025	1100	1200	1475	2400	9700
30	1000	100	290	1125	1200	1325	1625	2625	10600
31	1000	100	300	1225	1300	1450	1775	2850	11600
32	1000	110	330	1350	1425	1575	1925	3125	12600
33	1000	130	370	1475	1550	1700	2100	3400	13800
34	1000	140	400	1600	1675	1875	2300	3700	15000
35	1000	150	450	1750	1850	2050	2500	4050	16400
36	1000	170	490		2000	2225	2750	4425	17900
37	1000	190	550		2200	2425	3000	4825	19500
38	1000	210	610		2400	2650	3275	5275	21300
39	1000	230	680		2625	2900	3575	5750	23300
40	1000	260	750		2875	3175	3900	6275	25400
41	1000	290	840			3475	4250	6875	27800
42	1000	320	940			3800	4650	7500	30300
43	1000	360	1060			4175	5100	8200	33100
44	1000	400	1190			4575	5575	8975	36200
45	1000	440	1290			5000	6100	9800	39600
46	1000	500	1470				6700	10750	43300
47	1000	500	1470				6700	10750	43300
48	1000	570	1680				7325	11750	47400
49	1000	650	1940				8050	12875	51800
50	1000	760	2250				8825	14125	56800
51	1000	810	2410					15475	62200
52	1000	960	2860					16975	68200
53	1000	1160	3450					18650	74800
54	1000	1430	4240					20500	82000
55	1000	1800	5350					22550	90100
56	1000	2370	7040						99000
57	1000	3320	9870						108900
58	1000	5240	15570						119900
59	1000	11000	32730						132100

அட்டவணை “ஏ” “தனலச்சுமி”

வயது	மாதாந்த ஓய்வூதியம்	மாதாந்த தவணைக் கொடுப்பனவு	காலாண்டு தவணைக் கொடுப்பனவு	25 ஆண்டுகளில் 25 தவணைக் கொடுப்பனவுகள்	20 ஆண்டுகளில் 20 தவணைக் கொடுப்பனவுகள்	15 ஆண்டுகளில் 15 தவணைக் கொடுப்பனவுகள்	10 ஆண்டுகளில் 10 தவணைக் கொடுப்பனவுகள்	05 ஆண்டுகளில ´05 தவணைக கொடுப்பனவுகள்	ஒரே தடவைக் கொடுப்பனவு
18	1000	90	250	1150	1250	1450	1875	3200	13700
19	1000	90	270	1200	1325	1525	1975	3400	14500
20	1000	100	290	1275	1400	1625	2100	3600	15400
21	1000	110	310	1375	1500	1725	2225	3825	16300
22	1000	110	330	1450	1575	1825	2375	4050	17300
23	1000	120	350	1525	1675	1950	2525	4300	18400
24	1000	130	380	1625	1775	2075	2675	4575	19500
25	1000	140	400	1725	1900	2200	2825	4850	20700
26	1000	150	430	1825	2000	2325	3000	5150	22000
27	1000	160	460	1950	2125	2475	3175	5450	23300
28	1000	170	490	2075	2250	2625	3375	5800	24700
29	1000	180	530	2200	2400	2775	3600	6150	26200
30	1000	190	570	2325	2550	2950	3800	6525	27800
31	1000	200	590	2475	2700	3125	4050	6925	29500
32	1000	210	630	2625	2875	3325	4300	7350	31300
33	1000	230	680	2800	3050	3525	4550	7800	33200
34	1000	250	730	2975	3250	3750	4825	8275	35300
35	1000	270	790	3175	3450	3975	5125	8775	37400
36	1000	290	860		3650	4225	5450	9325	39700
37	1000	310	930		3900	4500	5800	9900	42200
38	1000	340	1010		4150	4775	6150	10500	44800
39	1000	370	1090		4400	5075	6525	11150	47500
40	1000	400	1190		4700	5400	6950	11850	50500
41	1000	440	1300			5750	7400	12600	53600
42	1000	480	1430			6125	7850	13400	57000
43	1000	530	1570			6525	8375	14225	60600
44	1000	580	1730			6950	8900	15150	64400
45	1000	620	1840			7400	9475	16100	68400
46	1000	690	2040				10100	17150	72800
47	1000	690	2040				10100	17150	72800
48	1000	860	2560				11500	19450	82400
49	1000	970	2900				12275	20725	87800
50	1000	1110	3300				13100	22125	93500
51	1000	1170	3490					23600	99700
52	1000	1370	4070					25200	106300
53	1000	1620	4820					26950	113500
54	1000	1960	5830					28825	121200
55	1000	2430	7250					30850	129500
56	1000	3150	9400						138600
57	1000	4360	12990						148300
58	1000	6770	20190						159000
59	1000	14040	41850						170500